Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/29.7.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 29.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

**ஆபரேஷன் சிந்தூர்** ராணுவ நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் இன்றும் விவாதங்கள் இடம்பெற்றன.

அனைவருக்கும் உலகத் தரமான கல்வி வழங்குவதற்கான **தத்துவக் கட்டமைப்பாகவே**, தேசிய கல்விக் கொள்கை திகழ்வதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

**இண்டியா ஸ்கில்ஸ்** திறன் போட்டிகளுக்கு பதிவு பெறுவதற்கான ஆன் லைன் வசதியை, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் இன்று தொடக்கி உள்ளது.

**நாசா – இஸ்ரோ** கூட்டுத் திட்டமான **நிசார்** செயற்கை கோளை, நாளை மாலை விண்ணில் செலுத்துவதற்கான **கவுண்ட்-டவுன் நடைமுறைகள்** இன்று பிற்பகல் தொடங்கி, வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

நாடாளுமன்றம் 1 (6)

மாநிலங்களவையில் இன்று, ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து, சிறப்பு விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் விவாதங்களை தொடக்கி வைத்து பேசுகையில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய 3 தீவிரவாதிகளை சுட்டுக் கொன்ற பாதுகாப்பு படையினருக்கு, வாழ்த்து தெரிவித்துக் கொண்டார். மாநிலங்களவை விவாதங்கள் குறித்து கூடுதல் விவரங்கள்……

**(வாய்ஸ்)**

***நாடாளுமன்றம்*** 2 (19)

**(வாய்ஸ்)**

இந்தியா தீவிரவாதத்தை கொஞ்சமும் சகித்துக் கொள்ளாது என்பதை தெளிவாக எடுத்துக் கூறுவதே, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் நோக்கம் என்றும், எதிர்காலத்தில் இத்தகைய துர் சாகசங்களில் ஈடுபடப் பாகிஸ்தான் துணிந்தால், ராணுவ நடவடிக்கையை மீண்டும் தொடக்க இந்தியா தயங்காது என்றும், பாதுகாப்பு அமைச்சர், மாநிலங்களவையில் கூறினார். பாகிஸ்தானின் அணு ஆயுத தாக்குதல் மற்றும் இதர நடவடிக்கைகளுக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது என்றும், அவசர தேவைகளுக்கான, அவசர கொள்முதல் பணிகளை மேற்கொள்ளும்

அதிகாரத்தை, அரசு ஏற்கனவே, பாதுகாப்பு படைகளுக்கு வழங்கி இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், ஊரி மற்றும் புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, பஹல்காம் தீவிரவாத தாக்குதலிலும் உளவுத் துறைத் தோல்வி இருந்ததாக குற்றம் சாட்டினார். ராணுவ நடவடிக்கைக்கு இடையில் போர் நிறுத்தம் அறிவிக்கப் பட்டதையும் அவர் குறை கூறினார். பாதுகாப்பு அமைச்சர் அப்போது குறுக்கிட்டு பேசுகையில், போர் நிறுத்தம் அறிவிக்கப் பட்டதில், எந்த ஒரு நெருக்குதலும் இருக்கவில்லை என்றும், அமெரிக்க அதிபருக்கும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் இடையே இதுகுறித்து பேச்சுவார்த்தை எதுவும் நடக்கவில்லை என்றும் கூறினார்.

*நாடாளுமன்றம்* 3 (12)

இதற்கிடையே, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து, மக்களவையில், நேற்று தொடங்கிய விவாதங்கள், இன்றும் தொடர்ந்து இடம் பெற்றன. சிவசேனா உறுப்பினர் திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூற வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிக் குழுக்களில் ஒரு குழுவிற்கு தலைமை ஏற்றும் வாய்ப்பை அரசு தமக்கு வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்., பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து எதிர்கட்சிகள் அரசுக்கு ஆதரவு

வெளியிட்ட நிலையிலும், எதிர்கட்சிகளுக்கு தேச பற்று குறைவு என்பது போல் அரசு சித்தரிப்பதாக திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி குற்றம் சாட்டினார். காங்கிரஸ் உறுப்பினர் திருமதி பிரியங்கா காந்தி, சமாஜ்வாதி கட்சியை சேர்ந்த திரு அகிலேஷ் யாதவ் உள்ளிட்டவர்களும் மக்களவை விவாதங்களில் பங்கேற்றனர்.

மோடி-விபத்து (11)

ஜார்கண்ட் மாநிலம் தியோகார் பகுதியில் இன்று, சாலை விபத்தில் பலர் உயிரிழந்தது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணம் பெறத் தாம் வேண்டுவதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். ஜார்கண்டின் **கயாஜி** மற்றும் **ஜெகானாபாத்** மாவட்டங்களில் இருந்து தியோகாரில் உள்ள **பாபா பைத்யநாத்** கோவிலுக்கு **சிராவண மாதக் கன்வர்** யாத்திரை மேற்கொண்ட பக்தர்களின் பேருந்து, இன்று அதிகாலை லாரியுடன் நேருக்கு நேர் மோதியதால் ஏற்பட்ட விபத்தில், 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 24 பேர் காயமடைந்து, **தியோகார் எய்ம்ஸ்** உள்ளிட்ட மருத்துவ மனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலை மோசமாக இருப்பதால் **பலியானோர் எண்ணிக்கை** மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கல்விக் கொள்கை (18)

அனைவருக்கும் உலக தரமான கல்வி வழங்குவதற்கான தத்துவ கட்டமைப்பாகவே தேசிய கல்விக் கொள்கை வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும், 2047 ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்டுவதற்கான முக்கிய வழியாகவே இக்கொள்கை திகழ்வதாகவும் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் அகில பாரத கல்வி பேரவை மாநாட்டில் தொடக்க அமர்வில் உரையாற்றிய அவர், இந்திய கல்வி முறையில் புரட்சிகரமான மறுமலர்ச்சி ஏற்பட்டு இருப்பதையே தேசிய கல்விக் கொள்கை புலப்படுத்துவதாக கூறினார். நாட்டின் பன்னெடுங் கால கலாச்சார மரபுகளுக்கு புத்துயிரூட்டி, தேசத்தை கட்டமைக்கும் பணிகளின் நடு நாயகமாக மாற்றுவதே தேசிய கல்விக் கொள்கையின் நோக்கம் என்று அமைச்சர் தெரிவித்தார். அனைவருக்குமான, முழுமையான, எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற, வலுவான கல்வி முறையின் வலுவான அடித்தளமாக தேசிய கல்விக் கொள்கை அமைந்திருப்பதாகவும் அவர் கூறினார். கல்வி கற்கும் மாணவர்களின் அதிகார பங்கேற்பை மேம்படுத்தி, புதுமையாக்க முயற்சிகளை ஊக்குவிப்பதன் மூலம், 21 ஆம் நூற்றாண்டில் உலகின் தலைமை நாடாக இந்தியாவை மேம்படுத்த தேசிய கல்விக் கொள்கை பெருமளவில் உதவும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கல்வி நிகழ்ச்சி (6)

தேசிய கல்விக் கொள்கையின் 5 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று இரவு 8.30 மணிக்கு, புதுச்சேரி வானொலியின் முதன்மை அலைவரிசையில், சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாக உள்ளது. புதுச்சேரி வானொலியின் செய்திப் பிரிவு தயாரித்து வழங்கும் இந்நிகழ்ச்சியில், தேசிய கல்விக் கொள்கை குறித்து, தாகூர் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் இ. எம் ராஜனின் உரை இடம் பெறுகிறது.

திறன் மேம்பாடு 1 (11)

**இண்டியா ஸ்கில்ஸ்** திறன் போட்டிகளுக்கு பதிவு பெறுவதற்கான ஆன் லைன் வசதியை, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் இன்று தொடக்கி உள்ளது. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இப்போட்டிகள் இந்தியாவின் திறமை வாய்ந்த இளைஞர்களை இனம் கண்டு, ஊக்குவித்து பரிசளிக்கும் வகையிலும், சர்வதேச அரங்குகளில் இந்தியாவின் பிரதிநிதிகளாக நிற்க இவர்களை தயார்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப் பட்டுள்ளன. நவீன பொருளாதாரத்தில், பயிற்சி பெற்ற மனித வளத்தின் முக்கியத்தவத்தை இளைஞர்களுக்குப் புரிய வைத்து, தொழில்கல்வி பயில்வதில் இவர்களை ஊக்குவிப்பதே, ஸ்கில் இண்டியா போட்டிகளின் முக்கிய நோக்கமாகும். ஸ்கில் இண்டியா போட்டிகள் குறித்து கூடுதல் விவரங்கள்......

( வாய்ஸ் )

திறன் மேம்பாடு 2 (12)

**( வாய்ஸ் )**

63 திறன் பிரிவுகளில் நடைபெற உள்ள ஸ்கில் இண்டியா போட்டிகளில், நாட்டின் அனைத்து 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, 16 முதல் 25 வயது வரையுள்ள இளைஞர்கள் பங்கேற்க உள்ளனர். சைபர் பாதுகாப்பு, மெக்காட்ரானிக்ஸ், வானூர்தி பராமரிப்பு போன்ற அதிநவீன தொழில்நுட்ப திறன் சார் போட்டிகளில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதிக்கு பின்னர் பிறந்தவர்கள் மட்டுமே பங்கேற்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தகுதி உள்ளவர்கள் ஸ்கில் இண்டியா டிஜிட்டல் இணையதளம் மூலம் வரும் செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள், போட்டிக்கு பதிவு பெறலாம். தேசிய அளவில் இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு விரிவான பயிற்சி, மற்றும், நிபுணர்கள் மூலமான வழிகாட்டுதல் வழங்கப்படும். இவர்கள் உலக திறன் போட்டி மற்றும் இதர சர்வதேச போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கலாம்.

செயற்கை கோள் (20)

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி அமைப்புடன் இணைந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் நிசார் செயற்கை

கோள் நாளை மாலை 5.40 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டா **சத்தீஷ் தவான் விண்வெளி மையத்தில்** இருந்து, இந்தியாவின் **ஜிஎஸ்எல்வி- எப் 16** ராக்கெட் மூலம், விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான **இருப்பத்து ஏழரை மணி நேர கவுண்ட்-டவுன்** நடைமுறைகள் இன்று பிற்பகல் தொடங்கி, வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. சூரியனின் இயக்கத்திற்கு இணையான பாதையில் பூமியை சுற்றி வரும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள நிசார் செயற்கை கோள், பூமியின் தரைப் பரப்பு மற்றும் பனிப் பரப்பில் ஏற்படும் மாற்றங்களை தொடர்ச்சியான முறையில் கண்காணிக்கவும், இயற்கைப் பேரிடர் வாய்ப்புகளை முன் கூட்டியே கணிக்கவும், பருவநிலை ஆய்வுகளுக்குத் தேவையான தரவுகளை சேகரிக்கவும், மிகவும் உதவிகரமான இருக்கும் என இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தோ-அமெரிக்க அறிவியல் ஒத்துழைப்பில் முக்கிய மைல் கல்லாகவும், புவிக் கண்காணிப்பு மூலம் உலக நலன்களை பாதுகாப்பதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் நடவடிக்கையாகவும், நிசார் செயற்கை கோள் அமைகிறது. நிசார் வெறும் செயற்கை கோள் மட்டும் அல்ல, அது, உலகுடன் இந்தியாவின் **விஞ்ஞானக் கைகுலுக்கல்** என்று, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

குபேர் (6)

புதுச்சேரியில், நகரத் தந்தை எதுவார் குபேர் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப் பட்டது. பொதுப்பணித்துறை அமைச்சர் திரு

லட்சுமி நாராயணன், அரசு கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய்சரவணன்குமார், திரு கே எஸ் பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன் ஆகியோர், பாரதி பூங்காவில் உள்ள குபேர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

*வானிலை* (13)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, ஆகஸ்ட் 4 ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் ஓரிரு இடங்களில், அதிகபட்சம் மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில், பலத்த தரைக் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், டெல்டா பகுதி மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களிலும், மதுரை மற்றும் ஈரோடு மாவட்டங்களிலும், அதிகபட்ச வெப்பநிலை, 37 டிகிரி செல்சியசை விட அதிகமாக பதிவாகி இருந்தது. நீலகிரி மாவட்டம் நடுவட்டத்தில் 1 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

புலிகள் தினம் (19)

புலிகள் இனத்தை பாதுகாப்பதில் இந்தியா குறிப்பிடத் தகுந்த வெற்றிகளை ஈட்டி இருப்பதாக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் கூறியுள்ளார். இன்று உலக புலிகள் தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவில் தற்போது 3 ஆயிரத்து 682 புலிகள் இருப்பதாக தெரிவித்துள்ளார். புலிகள் இனத்தை பாதுகாப்பதில் உலகிற்கே முன் மாதிரியாக இந்தியா திகழ்வதாகவும், புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது, இந்தியாவின் வன வளம் மேம்பட்டு வருவதற்கு அடையாளம் என்றும், அவர் கூறியுள்ளார். வன வளம் மேம்படுவதால் சமூகத்தின் வாழ்வாதாரங்களும் மேம்படும் என்பதால் புலிகள் மற்றும் அவற்றின் வாழ்விடத்தை பாதுகாக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். புதுடெல்லியில் உள்ள தேசிய வன விலங்கு பூங்காவில் இன்று நடைபெற்ற உலக புலிகள் தின விழாவிலும் அமைச்சர் திரு பூபேந்திர சிங் உரையாற்றினார். 2014 ஆம் ஆண்டில், நாட்டில் 47 ஆக இருந்த புலிகள் சரணாலயங்களின் எண்ணிக்கை, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ் தற்போது, 58 ஆக அதிகரித்து இருப்பதாக அவர் கூறினார். 97 நாடுகளில் உள்ள 7 வகை புலி இனங்களை பாதுகாப்பதற்கான, இந்தியாவின் சர்வதேச பெரும் பூனைகள் கூட்டணியும் வெற்றிகரமான முறையில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.